JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 473/2018 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | ஜெயபால் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 17.10.2023

**முதல் விசாரணை**

**நான் தற்போது கடையாலூருட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் செல்போன் கடை வைத்து தொழில செய்து வருகிறேன்.அசா1 எனது அக்கா, அசா2 எனது தகப்பனார். ஆஜர் எதிரி எனது அக்காவின் கணவர். எதிரி அமுதா ஆஜர் எதிரியின் 2 வதுமனைவி, எதிரி ராஜமணி எனது அக்காவின் மாமனார், எதிரி பொட்டு எனதுஅக்காவின் மாமியார். தற்போது எதிரி பொட்டு உயிருடன் இல்லை. 2007 ஆண்டு எனது அக்காவுக்கும் ஆஜர் எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது ஆஜர் எதிரியின் அப்பா ராஜமணி 250 கிராம் நகையும் , ரூ1 லட்சம் ரொக்கமும், 25 ஆயிரம் மதிப்புள் ள பண்டபாத்திரமும் வரதட்சனையாக கேட்டார். நாங்கள் எல்லாவற்றையும் கொடுத்தோம். எங்கள் ஊர் அம்மன் கோவில் வைத்து நாட்டாண்மை பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது செலவுகள் அனைத்தையும் எனதுதகப்பனார் ஏற்று செலவு செய்தார். எனது**

அக்காவின் கணவர் wonderla கம்பெனியில் வேலை செய்ததால் எனது அக்காவும் கணவரும் பெங்களூர் சென்றார்கள். பெங்களூரில் வாடகை வீடு எடுத்து தேவையான சமையல் பாத்திரங்களை நாங்கள் வாங்கி கொடுத்தோம் . 2012 ம் ஆண்டு எனதுஅக்காவின் கணவருக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டு பிரச்சனை ஆகிவிட்டதால் எனது அக்கா எனது அப்பாவிடம் சொன்னாள். அதற்கு பிறகு எனது அப்பா எனது அக்காவையும் , அவளின் கணவரையும கூட்டி கொண்டு வந்தார். அதற்கு பிறகு எனது அக்காளின் மாமனார்வீட்டில் சுமார் ஒரு மாதம் இருந்தார்கள். எனது அப்பா உதவி செய்ததின் மூலம் எனது அக்காவும், அவரது கணவரும், எனது அக்காவின் சின்ன மாமனார் வீட்டுக்கு வாடகைக்கு சென்று விட்டார்கள். 2015 ஆண்டு எனது அக்கா கணவருக்கு வேறு ஒரு பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அதற்கு இடையில் tyre மற்றும் பொருட்கள் வாங்க வேண்டும் என்று எனது அக்காவின் நகைகளை அவளது கணவர் வாங்கி சென்றுள்ளார். 2015 ஆண்டு 7 மாதம் எனதுஅக்காவின் கணவர காணவில்லை. அதற்கு மறுநாள் ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். விசாரணையில் எனதுஅக்கா தனியாக வாடகை வீட்டில் இருக்க வேண்டாம் என்றும் , எனது அக்காளின் மாமனார் வீட்டில்இருக்கலாம் என்றும் எனது அக்காவின் மாமனார் ராஜமணி சொல்லி அழைத் துசென்றார். அதற்கு பிறகு ராஜாமணி தனதுமகனை தேடி அழைத்து வருகிறேன் என்று சொல்லி ரூ1,70,000/- பணத்தை எனது அக்காவிடம் இருந்து வாங்கி கொண்டார். ராஜாமணி தேடி பார்க்கவில்லை ஊர் பெரியவர்களிடம் சொன்னோம். அதற்கு பிறகு பணம் இல்லை என்றும் , 50 செண்ட் இடத்தை எழுதி தருகிறேன் என்று சொல்லி எனது அக்காளின் மாமனாம் எனது அக்காவுக்கு கிரையமாக எழுதி கொடுத்தார்,வீடு எதுவும ்கொடுக்கவில்லை. அதற்கு பிறகு இரண்டு மாதங்கள் எனதுஅக்கா இருந்தாள். 10 வது மாதம் அமுதாவும் எனது அக்காளின் கணவரும் வந்தார்கள். எனது அக்காளை பார்த்து இன்னும் இந்ததேவிடியா போகவில்லையா, பிள்ளை பெற வக்கில்லை என்று எனது அக்காளின் கணவர் எனது அக்காளை இழுத்து போட்டு எனது அக்காளின் மாமனார், மாமியார், அடிப்பதாக ஐவேலன் எனக்கு போன் செய்து சொன்னார்கள். கையில் மண்ணெண்ணெய் கேன் ராஜகுமார் வைத்திருக்கிறார் என்றும் போனில் சொன்னார். நான் பைக்கில் சென்று பார்த்தேன். எனது அப்பாவும் வந்தார். நாங்கள் எனது அக்காவை கூட்டி வந்து ஊர் பெரியவர்களிடம் சொன்னோம். ஊர் பேச்சுக்கு ஆஜர் எதிரி கட்டுப்படவில்லை. நீதிமன்றத்தில் பார்த்து கொள்கிறோம் என்று

சொல்லி விட்டார்கள். அதற்கு பிறகு ஆலங்குளம் அனைத்துமகளிர் காவல் நிலையம் சென்றோம் எ னது அக்கா புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் தரப்பில் குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// - ஜெயபால்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 473/2018 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | வெள்ளைசாமி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 17.10.2023

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையாலூருட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சைக்கிள் பஞ்சர் கடைவைத்துள்ளேன். அசா1 எனது மகள். ஆஜர் எதிரியை எனது மகளின் கணவர். எதிரி அமுதா எனதுமருமகனின் 2 வது மனைவி, எதிரி ராஜாமணி எனது மருமகனின் தகப்பனார், எதிரி பொட்டு எனது மருமகனின் தாயார். பொட்டு தற்போது உயிருடன் இல்லை. எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் , இரண்டு பெண் பிள்ளைகள் . நான்கு குழந்தைகளில் மூத்த குழந்தைஅசா1 சித்ரா. எதிரி ராஜாமணி எதிரி ராஜகுமாருக்கு எனது மகள் சித்ராவை பெண் கேட்டு வந்தார். அதற்கு ரூ1லட்சம் பணமும் , 250 கிராம் நகையும், பண்ட பாத்திரங்கள் ரூ25 ஆயிரத்திற்கும் கேட்டார். நான் அனைத்தையும் கொடுத்து கடையாலுருட்டி மாரியம்மன் கோவிலில் பெரியவர்கள் முன்னிலையில் திருமணம்நடந்தது . எனது மகள் எனது மருமகன் வீட்டுக்கு சென்றார். கொஞ்ச நாட்கள் கழித்து பெங்களூரில் வேலை செய்யும் இடத்திற்கு எனது மகளும், மருமகனும் சென்றார்கள். சில காலம் நன்றாக

இருந்தார்கள். அதற்கு பிறகு ஒரு பெண்ணுடன் எனதுமருமகன் பிரச்சனை ஆனவுடன் , அங்கே கண்டித்தால் எனது மகளுக்கும் மருமகனுக்கும் குடும்பத்தில் சண்டை வந்து ஊருக்கு வந்துவிட்டார்கள். ஊருக்கு வந்து ஒரு 10 நாட்கள் ஒரு மாதத்திற்குள் எனதுமகள் மாமனார் வீட்டில் இருந்து விட்டு எனது மருமகன் வாடகைக்கு வீடு பார்த்து எனதுமருமகனின் சித்தப்பா வீட்டில் குடும்பமாக இருந்தார்கள். குறுகிய நாட்களில் ஊருக்குள் அமுதா என்ற பெண்ணுடன் எனது மருமகனுக்கு பழக்கம் ஏற்பட்டுள்ளது. 2015 ஆண்டு எனது மருமகன் , பெருமாள் நாடார் மகள் அமுதாவை கூட்டி சென்று விட்டார். தேடியலைந்தோம் கிடைக்கவில்லை. எனதுமருமகனின் தகப்பனார் ராஜமணியிடம் சொன்னோம். அவரும் தேடி பார்த்து பணம் காலியாகி போய்விட்டது என்று சொன்னார். என் மகளிடம் கேட்கும் போது இடத்தை விற்று தான் தேடவேண்டும் என்று சொன்னார்கள். இடத்தை வாங்க ஆள் இல்லை என்பதால் ரூ1,70,000/- எனது மகள் மூலம் கொடுத்து அந்த இடத்தை எனது மகள் பெயருக்கு கிரைய பத்திரமாக செய்து கொடுத்தார்கள். அந்த இடம் ரூ70,000/-க்கு தான் மதிப்பு உள்ளது. அதற்கு பிறகு எனதுமகள் அவளின் மாமனார் வீட்டில் இருந்தாள். கோவில் திருநாள் வந்தது. 2015 ஆண்டு கோவில் திருவிழா அன்று காலை 7.00 மணி மேல் 8.00 மணிக்குள் எனதுமருமகன் வந்து எனதுமகளை பார்த்து இந்த தேவிடியா இன்னும் போகவில்லையா, இந்த முண்டச்சி இன்னும் உயிருடன் இருக்காலா என்று கேட்டுவிட்டு, எனதுமகளின் முடியை பிடித்துஇழுத்து தெருவில் போட்டு எனது மகளின் மாமனார் ராஜமணி, மாமியார் பொட்டு , எனதுமருமகன் ராஜகுமார் எல்லோரும் சேர்ந்து அடித்து போட்டுவிட்டார்கள். பக்கத்து வீட்டு பையன் பார்த்து விட்டு எனதுமகனுக்கு போன் செய்துள்ளார். என் மகன் என்னை அழைத்து கொண்டு எனது மருமகன் வீட்டுக்கு சென்றோம். எனது மகள்தெருவின் மூலையில் முடங்கிகிடந்தாள். எனது மகள் நெஞ்சு வலிக்கிறது மிதித்து விட்டார்கள் என்றுசொன்னாள். அதற்கு பிறகு அவளை வீட்டுக்கு கூட்டி சென்ற போது ஊரில் நிர்வாகிகளிடம்சொன்னோம். நிர்வாகிகள் கேட்டதற்கு முடிந்ததை பாருங்கள் என்று எனது மருமகன் வீட்டில் எல்லோரும் சொல்லி விட்டார்கள். அதற்கு பிறகு ஆலங்குளம் மகளிர் காவல்நிலையத்தில் எனது மகள் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// - வெள்ளைசாமி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 473/2018 |
| | : | Prosecution P.W -1 |
| NAME | : | சித்ரா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 17.10.2023

முதல் விசாரணை

நான் தற்போது கடையாலூருட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. ஆஜர் எதிரி எனது கணவர். எதிரிஅமுதா எனது கணவர் இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார். ராஜமணி எனது மாமனார். எதிரி பொட்டு எனது மாமியார். எனது மாமியார் இறந்து விட்டார். எனக்கும் எனது கணவருக்கும் 2007 ம் ஆண்டு 13ம் தேதி டிசம்பர் மாதம் கடையாலூருட்டி அம்மன்கோவிலில் வைத்து எங்கள் சமுதாய வழக்கப்படி திருமணம் நடந்தது. திருமணத்தின் போது எனது கணவர் வீட்டில் இருந்து வரதட்சனை கேட்டதால் ரூ1லட்சம் ரொக்கம், 250 கிராம் நகை, ரூ25 ஆயிரம் மதிப்புள்ள வீட்டு உபயோகபொருட்கள் கொடுத்தோம். திருமண செலவை எனது தகப்பனார் ஏற்று செய்து முடித்தார். திருமணத்தின் போது எனது கணவர் பெங்களூர் wonderla கம்பெனியில் ஓட்டுநராக பணி செய்தார். பெங்களூரில் நானும் எனது கணவரும்

2012 ம் ஆண்டு வரை இருந்தோம். 2012 ம் ஆண்டு எனது கணவர் வேலை பார்த்த இடத்தில் ஒரு பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டு பிரச்சனை ஆனது. அதனால் எனது கணவர் வேலை செய்யும் இடத்தில் வேலை கிடையாது என்று சொல்லி விட்டடார்கள். அதனால் எனக்கும் எனது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு நானும் எனது கணவரும் ஊருக்கு வந்து விட்டோம். ஊருக்கு வந்து எனது மாமனார் மாமியாருடன் நாங்கள் ஒரு மாதம் இருந்தோம். அதற்கு பிறகு எனது சின்ன மாமனார் வீட்டில் நானும் எனது கணவரும் தனியாக இருந்தோம். 2014 ம் ஆண்டு வரை நானும் எனது கணவரும் சந்தோசமாக இருந்தோம். 2015 ம் ஆண்டு தொடக்கத்தில் எனது கணவரிடம் பல மாற்றங்கள் தெரிந்தது. என்னிடம் இருந்து எல்லா நகையையும் வாங்கி எனது கணவர் வைத்துரு கொண்டார். வீட்டில் தேவையில்லாமல் எனது கணவர் சண்டைபோட்டார். அதை பற்றி என்ன என்று பார்க்கும் போது பக்கத்தில் தெருவில் உள் ளஅமுதா என்பவரிடம் எனது கணவர் தொடர்பில் இருந்தார். அதை பற்றி கேட்டால் எனது கணவர் என்னை மிகவும் அசிங்கமாக திட்டினார். பிள்ளை பெறமுடியாத மலடி என்னை எப்படி எதிர்த்து பேசுகிறாய் என்று திட்டினார். வீட்டுக்கு தேவையான பொருட்கள் சாப்பாட்டுக்கு தேவையான பொருட்கள் வாங்கி தருவதில்லை. 17.07.2015 ம் தேதி நான் அணிந்திருந்த செயினை என் கணவர் சண்டை போட்டு வாங்கி சென்று விட்டார். அப்போது சென்ற எனது கணவர் திரும்பி வரவில்லை. மறுநாள் தான் எனது கணவரும் அந்த அமுதா என்ற பெண்ணும் ஊரில் இல்லை என்று தெரியவந்தது. எனது கணவரும் அமுதாவும் திருமணம் செய்து கொண்டார்கள் என்று தெரிந்தவுடன் நானும் எனது அப்பாவும் ஆலங்குளம் அனைத்துமகளிர் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தோம். அதற்கு மனு ரசீது தந்தார்கள். அந்த புகாரில் விசாரணை செய்தார்கள். என்னையும் எனது மாமனார், மாமியாரையும் விசாரணை செய்தார்கள். எனது மாமனாரும் மாமியாரும் மருமகளை நன்றாக பார்த்து கொள்கிறோம் என்று சொல்லி என்னை கூட்டிகொண்டு போனார்கள். எனது கணவரை தேடி கண்டுபிடிக்க செலவுக்கு பணம் இல்லை என்று எனது மாமனார் மாமியார் சொன்னார்கள். அப்போது நான் என் அப்பாவிடம் சென்று கேட்டேன். அப்போது என் அப்பா என் மூலமாக ரூ1,70,000/- என் மாமனாரிடம் கொடுத்தார். அதற்கு பிறகு எனது மாமனார் மாமியார் எனது கணவரை தேடவில்லை. அதற்கு பிறகு பணம் தரமுடியாது என்று சொல்லி எல்லோரும் பேசி 50 செண்ட் இடத்தை எனது மாமனார் எனது பெயருக்கு எழுதி வைத்து என்னை அவர்கள் வீட்டில் இருக்க சொன்னார்கள். அந்த 50 செண்ட் இடம் எங்கிருக்கிறது

என்று எனக்கு தெரியாது. நான் 10வது மாதம் வரை என் மாமனார் வீட்டில் இருந்தேன். 2015 ஆண்டு 10 வது மாதம் 7 ம் தேதி எனது கணவரும் எனது கணவர் இரண்டாவதாக திருமணம் செய்த அமுதாவும் என் மாமனார்வீட்டுக்கு காலை 8.00 மணியளவில் வந்தார்கள். வந்தவுடன் என்னை பார்த்து எனது கணவர் தேவிடியா பலவட்டர செறுக்கி என்று என்னை திட்டினார். திட்டியது மட்டுமில்லாமல் என்னை வீட்டில் இருக்க கூடாது என்று சண்டைபோட்டார். அதில் என் கணவர் என்னை முதலில் அடித்து கீழே தள்ளி விட்டார். அதற்கு பிறகு அமுதா , என் மாமனார், என் மாமியார் மூன்று பேரும் என்னை தர தரவென்று வெளியில் இழுத்து போட்டார்கள். அதற்கு பிறகு என்னை அடித்து விட்டு பிள்ளை பெறமுடியாத தேவிடியா என்று திட்டினார்கள். நான் அங்கிருந்தால் என்னை மண்ணெண்ணெய் ஊற்றி கொன்று விடுவதாக எனது மாமியார் சொன்னார். அப்போது நான் அழுது கொண்டிருந்தேன், எனக்கு நிறைய பேர் பார்த்ததால் அசிங்கமாக இருந்தது. அப்போது கணேசன் மகன் ஐவேலன் என்பவர் எனது வீட்டுக்கு போன் செய்தார். அதற்கு பிறகு எனது தம்பி ஜெயபாலும் எனது அப்பாவும் வந்தது பேசினார்கள். அப்போது எனது கணவர் வீட்டில் என்னை வேண்டாம் என்று ஒதுக்கினார்கள். அதற்கு பிறகு ஊர் பெரியவர்களிடம்பேசினோம், vice president. chairman, முருகன், ரெங்கநாதன், மாரியப்பன் ஆகியோர்களிடம் பேசினோம். அப்போது நான் எனதுகணவர் வீட்டில் இருக்கட்டும் என்று சொன்னதற்கு எனது கணரும், மாமனாரும், மாமியாரும், அமுதாவும் என்னை எனது கணவர் வீட்டில் இருக்க கூடாது என்று சொன்னார்கள். அதற்கு பிறகு நாங்கள் ஆலங்குளம் அனைத்துமகளிர் காவல் நிலையத்திற்கு சென்றோம். 11.10.2015 ம் தேதி புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. எனது கணவருக்கு அமுதாவுடன் திருமணம் முடித்து திருமணம் மூலம் மூன்று குழந்தைகள் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// - சித்ரா

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi